ஓலை 140| ஓசை 263| செப்டம்பர் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## 'சிலம்பொலி' சு.செல்லப்பன்

# கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
**அனைத்தே புலவர் தொழில்**

## பொருள்

**மற்றவர்கள் கூடி வரும்போது, மனம் மகிழ அவர்களுடன் கலந்து பேசி, இனி இவரை எப்போது, எவ்வாறு சந்திக்கப் போகிறோம் என்று அவர்கள் எண்ணுமாறு பிரிவது கற்று அறிந்தவரின் செயல்.**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## பாலோ டாயினுங் காலம் அறிந்துண்!

பாவகை : கலிமண்டிலத்துறை




கார்முகி லாயினும் காலத்தே பொழிய வேண்டும்:
பார்முழு வதுமே பகலொளிப் பொழிய வேண்டும்.
சீர்மிகு பால்பழம் சிறந்த உணவே வேண்டும்.
நீர்தான் எனினும் காலத்தால் அருந்த வேண்டும்!

உழைத்தே உண்டாலும் காலத்தே உண்ணல் வேண்டும்,
தழைத்தே உடல்செழிக்க காலத்தே உண்ணல் வேண்டும்.
பிழைத்தே உண்டபோதும் காலத்தே உண்ணல் வேண்டும்.
விழைந்தே கஞ்செனினும் காலத்தே குடித்தல் வேண்டும்|

ஏழைச் செல்வர் எனினும் காலத்தே உண்ணல் வேண்டும்
கோழையே என்றாலும் காலத்தே உண்ணல் வேண்டும்
வாழையிலை விரித்தே வகையாய் உண்ணல் வேண்டும்;
தாழையாய் மணக்கக் காலத்தே உண்ணல் வேண்டும்!

அருவிநீரை ஆறும் காலத்தே அருந்தும் பாரீர்,
குருவி காக்கையும் காலத்தே உண்ணல் காணீர்;
பருவத்தே பயிர்செய்தல் போலவே உண்ணல் ஏற்பீர்;
அருகிடா அன்பையும் அகத்திலே உண்ண வைப்பீர்!




இருளையும் இரவு வேளையில் ஒளியும் உண்ணும்;
இருளும் குளிரை மார்கழியில் இனிதே உண்ணும்:
அருளுங் கூட காலத்தே வழங்கும் தெய்வம்;
உருவம் பெருக்கா வண்ணம் காலத்தே உண்ணும்!

**இலக்கணக் குறிப்பு:**

ஒரு அடியுடன் இன்னோரடி இணைந்து பொருள் தராமல், தனித்தனி அடியால் தனித்தனி பொருள் கொடுக்கும். அடிகளை மாற்றிப் போட்டாலும் வழுவாது பொருள் கொடுக்கும் ஆசிரியப் பாவில் வரும் அடிமறி மண்டில ஆசிரியப் பா போன்ற பாட்டு இது இதில் சந்த ஓசையுடன் திகழும் கலிமண்டிலத்துறை எனப்படும். நான்கடியும் ஐந்து சீர் பெற்று, ஓரெதுகையில் அமையும் மோனை மூன்றாம் ஐந்தாம் சீரில் வந்தால் சிறப்பு, மோனை இல்லாமலும் வரலாம். தளை பார்க்கத் தேவையில்லை.

**நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்**

பாவகை : பஃறொடை வெண்பா

வாழ்வில் வருமே வறுமையும் வாட்டமும்
தாழ்ந்தே புலம்பல் தனித்தே ஒதுங்கியே
வாழ்ந்திட உள்ளினால் வாய்ப்பும் வந்திடுமே
காழ்ப்பை உதறியே கள்ளம் அகற்றிட
ஏழ்மையில் துள்ளி எழுந்தே உழைத்திட
வீழ்ந்தாலும் மண்ணில் விரைந்தே எழுந்திட
ஆழ்மனதில் நம்பிக்கை ஆழ்த்து.



கவிஞர் செ. கலைவாணி

# பூர்ணிமா சங்கர் கவிதைகள்

### 1) புத்தரின் புன்னகை

சித்தார்த்தன் மாண்டு சிறையும் திறந்திட
புத்தன் பிறந்தான் புகல்

உதிர்க்கத் தெரிந்தால் உலகமே போற்றும்
உதிர்த்திடும் ஆசை உயர்வு

வலிகள் விலக வழிகளும் உண்டு
வலிமை துறவறம் வார்த்து

இடர்கள் சுமக்கும் எதுவுமே வேண்டாம்
நடந்திட கால்போதும் நம்பு

எத்தனை பற்றுகள்? இத்தனை பாரமாய்
மொத்தமாய் வீழ்த்து முனைந்து



### 2) மரபும் புதுமையும்

ஒன்றும் இரண்டும் உவகையுடன் கூடிட
நின்றிடும் பேரழகு நீண்டு

அறிவும் அழகும் அணைக்கும் பொழுதில்
செறிவாய் மலரும் சிறப்பு

நெறியுடன் கூட நிகழ்த்து புதுமை
அறிவார்ந்த பண்பினில் ஆங்கு

மரபை உடைக்கா வளரும் புதுமை
வரமாய் அமைந்திடும் வாழ்த்து

பாட்டனவன் தந்ததை பாங்குடன் காத்துநீ
ஏட்டில் புதுமை எழுது

### 3) நிலமெனும் ஆயுதம்

நிலையில்லா வாழ்வில் நிலங்கள்மேல் வீசும்
அலையெடுக்கும் ஆசை அழிவு

நிலமெனும் ஆயுதம் நீள சுமையில்
உலரும் மனத்தின் உணர்வு

ஒற்றுமை மாற்றிடும் ஒவ்வா நிலையாக்கும்
உற்றார் உறவை உடைத்து

பந்தமும் பாசமும் பாசாங்காய் தோன்றிடும்
முந்தும் நிலத்தாசை முன்

விட்டுக் கொடுக்க விரும்பு மகிழ்வுகள்
தொட்டே அணைக்கும் தொடர்ந்து

கவிஞர் பூர்ணிமா சங்கர்

# நான் வீழ்வேனென்று நினைத்தாயோ



விதியினையும் பாய்போல
விரல்நுனியால் சுருட்டிடுவாய்
விதியெனவும் மருளாமல்
விண்கதிரால் உருட்டிடுவாய்

கதியெனவும் கலங்காமல்
காற்றாகி பறந்திடுவாய்
மதியென்னும் ஆயுதத்தால்
மானுடத்தில் சிறந்திடுவாய்

கிண்டல்கள் பலப்பேசி
கேலிசெய்வோர் நடுவினிலும்
மண்டியிட்டு விழுந்திடாமல்
மார்நிமிர்த்தி
வென்றிடுவாய்

எண்ணத்தில் எழுச்சிதீபம்
ஏற்றித்தான் ஒளிர்ந்திடுவாய்
வண்ணமுள்ள விருட்சம்போல்
வாழ்வெங்கும் துளிர்த்திடுவாய்

தளர்நடையின் பருவத்திலும்
தடுமாறா மனதாலே
இளந்தளிரன் குணமாக
இனியவைகள் செய்திடவும்

களர்நிலத்தின் குணமகற்றி
காணுலகை கொய்திடவும்
வளர்பிறையின் மதிப்போல
வானுலகம் வியந்திடவும்

பிறர்மனங்கள் நோகாமல்
பிறர்நலமும் தன்னலமாய்
நறர்படும்இன் னல்களையும்
நலியாமல் காத்திடுவாய்

பிறவிபயன் யாதென்றால்
பிறர்நலன்கள் காத்தல்தான்
அறப்பணியால் அன்பொழுக
அகிலத்தை மாற்றத்தான்

வேடிக்கை மாந்தர்போல்
வீழ்ந்துதான் மடியாமல்
பாடிநிதம் பாருலகை
பாட்டினாலே நிமிர்த்திட்டு

நாடியேதான் நற்றமிழை
நரம்புகளில் ஓடவிட்டு
கோடியாண்டு புகழ்பெற்று
கோலோச்சம் பாரதிபோல்

தாழ்வுநிலை தான்மறந்து
தன்மதிப்பை கூட்டிவிடு
ஆழ்கடல்போல் அலையாகி
அன்பினால் ஆட்டிவிடு

சூழ்நிலையின் வலையறுத்து
சூட்சுமத்தை அகற்றிவிட்டு
வீழ்ந்திடாமல் தோல்விகளை வென்றே!

கவிஞர் தி. செல்வராணி, திட்டக்குடி

# தாலாட்டும் தலைமகனே!

(இளையராஜா பொன்விழா பயணம் வாழ்த்துரை)



இசைச்சுரங்களுக்குள் எமைக் கரைத்துவிட்டு
இதயத்தின் குருதியோட்டத்தில்
எப்போதும் அமைதியையும்
ஆழ்நிலைத் தியானத்தையும் அருளிச்செல்லும்
காற்றில் தவழும் ஒலிக்குள்
பயணத்தில் உடன் வருகிறீர்.
பயணித்தலில் ஆற்றுப்படுத்தி
தாலாட்டும் உனது கீதம்தான்
விழிப்பைத் தந்து களைப்பைப் போக்கும்
மருந்தாகவும் ஒட்டுநருக்கு
மாறி விடுவதன் அதிசயம்தான் என்ன?
மொழிப் பேதங்களைத் துறந்து
மனப் பிதற்றல்களை மறந்து
எல்லை வகுத்திடும் பிரிவினையகற்றி
அழுத்தப் புயல்களுக்குள் அமிழ்ந்து போகாது
மனதைப் புதிதாக்கி
அவ்வப்போது உள்ளே எழும்பும்
மிருகத்தின் கோரத்தை
வன்முறையின் வெறியாட்டை
சுரத்திற்குள் வெட்டியெறிந்தே
சொர்க்கத்தைப் பரிசளித்தீர்.
ஆற்றாமை முளைக்கையிலே
அழுக்காறு படிகையிலே
சினமென்றே தேகமெங்கும்
வெடியாகச் சீறுகையில்
மனமெலாம் மாசுற்று
மகிழ்வைத் துறக்கையிலே
பெரும் புலமை தான் துறந்து
பித்தனைப் போல் புலம்புகையில்
தீர்வெட்டா இடருக்குள்
தேகத்தின் சிந்தையெலாம்
இருளைப் போர்த்துகையில்
திசை கண்டு தெளிவாக்கும்
இசைப்பிறப்பில் எமைக் காப்பாய்.
ஓர் புள்ளியாய் உருவாகும்
கரு சுமந்த பொழுதில் தொடங்கி
உயிர் வளர்ந்து உலகைக் கண்டு
நகரும் வாழ்வின் தருணத்தில்
தனைக் கொடுத்தே நடக்கையிலும்
வினைப்பயன் முடிவுற்றே வீதிபார்த்தபடி
இறுதிச் சுற்றில் நுழைகையிலும்
நீங்காததொன்றென
ஒலித்திட்ட உன் சுரத்தில்
நீளும் சுகமே நிலைபெற்றது.
பேருந்தின் உள்ளே
ஒலியென உடன் வரும்
நீங்கள்தான்
வெளியே ஒளிச்சுடர் பாய்ச்சி
உருவத்தில் மிதக்கிறீர்.
வெளியே உருவாய்
உள்ளே குருவாய்
எப்போதும் இசையட்டும்
உம்மோடு எம் பயணம்.

கவிஞர் இளையவன் சிவா

# கன்னக்குழி

சிரிக்கும் நேரம்
கன்னத்தில் மலரும் குழி,
சின்ன ரோஜா இதழ் போல
நெஞ்சை கவரும் தழை.



ஒரு சிறு வளைவு
ஆயிரம் கதையைச் சொல்லும்,
அழகின் அலைகள்
மனதினை கொள்ளை கொள்ளும்.

அந்த குழியில் மறைந்திருக்கும்
இனிய பாசம்,
இதயம் தோறும் விழும்
காதல் வாசம்.

கவிஞர் ம. ஹரீஷ், பாலூர், செங்கல்பட்டு மாவட்டம்



அகர முதல

# காதலடி நீ எனக்கு



கார்மேகக் கூந்தலழகி
காந்தமாய் ஈர்த்தாயே
விண்மீனின் ஒளியாகி
வியந்திடச் செய்தாயே

நிலவின் குளிரில்
நித்தமும் நனைகிறேனே
ஆரணங்கின் எழிலில்
ஆனந்தம் அடைகிறேனே

பூவையின் இதழ்களில்
பூரிப்பும் மலர்கிறதே
என்னுள்ளே நுழைந்து
எண்ணமதில் நிறைந்தாயே

அழகோவியமே உனது
அங்கங்களால் வசியமாக்கினாயே
எழிலான தேகமதில்
எண்ணங்கள் சிதறுகிறதே

இளந்தென்றலாய் இதயமதை
இதமாய் வருடுகிறாயே
நளினமானப் பார்வையால்
நர்த்தனமாடும் நங்கையே

பல்லிடுக்கில் சிக்கிய
உணவுத்துகள்களாய் உன்னினைவுகளே
மந்திரத்தால் வசமாக்கி
மயக்கினாய் என்னையே

மீண்டிட வழியின்றி
மீன்விழியாளிடம் சரணடைந்தேனே
மானாட்டம் துள்ளலில்
மனதும் குதூகலமானதே

உயிரானவளே காதலடி
நீயெனக்கு அன்பே
உறவாடிக் களிப்புற்று
உணர்வுகளோடு கலந்திருப்போமே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# தளராதே!

ஊர் உலகம் பல பேசும்
சத்தியமென உரத்தும் சொல்லும்
சங்கடமோ நமக்கெதற்கு
சாமர்த்தியமாய் விலகிடுவோம்



பொல்லாத மனிதர்கள்
சொல்லாமலே செய்திடுவர்
ஏலவே நீ கூறியும்
ஏமாளியாய் ஒதுக்கிடுவர்

அவதூறும் வேண்டாம்!
அவமரியாதையும் வேண்டாம்!
அன்பாய் நீ பேசக்கண்டு
அடிமைத்தனமும் வேண்டாம்!

பொல்லாத வாழ்விதினில்
சொல்லாமலும் பலயிருக்க
கண்டிடாமலும் சிலதிருக்க
நாம் செய்யும் எது வொன்றும்
நடுத்தெருவில் தள்ளிடுதே!

விரக்தி நீ அடையாதே!
விடாப்பிடியிலும் இருந்திடாதே!
வீணாண எதுவொன்றும்
உனை ஒட்ட எண்ணாது

கவிஞர் ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான், புல்மோட்டை (இலங்கை)

# மௌன மொழி

மானுடம் வாழ்ந்திடும் இப்பூவுலகில்.
மனதின் மொழி அறியாமை யார் பொறுப்பு
வார்த்தையினால் வரும் மொழியை விட
மனதினுள் வருகின்ற
ஊமை மொழிக்கு மதிப்பு அதிகமாம்.
ஏனோ அந்த சலுகை தெரியவில்லை?
மன்னவன் மனதில் புதைந்துள்ள
வெளிவரா ஆசைகள்,
மங்கையவள் மனதின்
யாருமறியா இரகசியம்கள்
யாவும் மாண்டு விட்ட
மௌனத்தின் சாயல்
என்றோ ஒருநாள் வெடித்து விடும்
மலர் கன்னிகளே
இந்த மௌன மொழி



கவிஞர் என். ரிஷானா, ஓட்டமாவடி (கிழக்கிலங்கை)

# ஓட்டம்

இந்த வாழ்க்கைக்காக
நான் எவ்வளவு ஓடியிருக்கிறேன்.
இந்த உலகம் என்னை
எவ்வளவு சுற்றவிட்டிருக்கிறது.
அத்தனையும்
கூட்டல் குறைச்சலின்றி
அப்பட்டமாய் சொல்லிப் பிரிந்தது
கடைசியாக தூக்கி வீசப்பட்ட
நைந்து போன
என் பழைய செருப்பு.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# இவைகள் நிஜம் தானா

குல்லாய் குரங்கு
வாழ்க்கை
என் வாழ்க்கை!

உலகம் சிரிக்கிறது
நான் சிரிக்கிறேன்
உலகம் அழுகிறது
நான் அழுகிறேன்!

நான் வேர்
மறைக்கபட்டு
மண்ணில் புதைந்து
இருக்கின்றேன்!

பசுமையாய் மேலே
துளிர்க்கும்
இலைகளை கண்டே
புன்னகைக்கிறார்கள்!

காற்றாக நான்
இருந்தாலும்
நீர்நிலையில்
அலைகளை தான்
கொண்டாடுகிறார்கள்!

மகரந்த மாய்
நான் இருந்தாலும்
கனியின் சுவையையே
சிலாகிக்கிறார்கள்!



மூங்கிலில் துளையிட்டு
புல்லாங்குழல் ஆக்கினேன்
யாரோ உதடு வைத்து
இசைக்கிறார்கள்!

நாளெல்லாம் காய்ந்து
கடல்நீரை ஆவியாக்கினேன்
கருமேகங்களையே
வரவேற்கிறார்கள்!

நூல் கொடுக்கும்
உயிர் பருத்தி நான்
நெசவு எந்திரங்களே
வணங்கப்படுகின்றன!

கவிஞர் கவி. சுகிரத்னம், (இர. தியாகராசன்)

# பூஞ்சோலை

கட்டாந் தரையில்
ஒரு சோலை

விழைவின் அழைப்பு!
உழைப்பின் சிரிப்பு!

சிவப்பும்,மஞ்சளும்,
வெள்ளையும், ஊதாவுமாக;

பசுமை செடியில்
கொற்றவை முகம்:

விண்மீனென
வெண்மை பூக்கள்:

மனம் கொண்ட
மங்கையின் நினைவு வரும்;
ஊதா பூங்கொத்தில்!

மக்களின் மலர்வின் நினைவில்
மலர்ந்து சிரிக்கும்
மஞ்சள் மலர்!

ஆர்கிட் பூஞ்சோலை
கான்க்ரீட் கட்டடத்தில்



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

மூத்தமொழியாய் திகழ்ந்திடினும்
இளமையின் வனப்பில் சிறப்பவளே!
மூவேந்தர் சங்கம் கூட்டி வளர்த்த
முத்தமிழே! தேனே! பாகே! செங்கரும்பே!
கல்தோன்றி மண்தோன்றா
காலத்தே முன்தோன்றிய
மூத்தமொழியே! செம்மொழியே!
உன்குழலோசை உலகெங்கும் பரவ
உள்ளமெல்லாம் பொங்கி
வழியிது இன்பத்தேனின் இனிமை.
தேமதுரத் தமிழோசை
உலகமெல்லாம் பரவும்
வகை செய்ய வேண்டும்.
கம்பனும் வள்ளுவனும்
இளங்கோவும் பாரதியும்
இன்னும் பல கவிஞர்கள்
புலவர்கள் கண்ட
தமிழ் மண்ணில்
ஊமையராய், செவிடராய் குருடராய்
வாழவும் வேண்டுமோ?
மகிழ்வு வந்து
மாமனிதராய் மாறிட வேண்டுமெனில்.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# இல்வாழ்க்கை

அறநிலைகளில் மூவர்க்கும் ஒழுக்க நெறியோடு துணை நிற்பானே
அகவாழ்வால் இணைந்த இல்லறத்தில் சிறந்திருப்போனே

துறவி, ஏழை, ஆதரவிலிகளுக்கு உதவுவானே
ஆற்றோர பனை போல் தோள் கொடுப்பவனே

ஐம்புல மாந்தர் ஐவருக்கும் செய்தலே
ஐவகை நிலத்திலும் தலையாய கடனே

பழிக்கு அஞ்சல் பகுத்துண்ணல் உடையவனின் சந்ததி
வழிபட வேண்டிய இறைவனின் சன்னதி

அன்பும் அறமும் கொண்ட தலைவன் தலைவியின் இல்வாழ்வு
பண்பும் பயனும் நிறைந்த நல்வாழ்வே



அறவழியில் இல்வாழ்வு நடத்துவான் என்றும்
பிறவழியில் பயன்பெறல் வேண்டற்பாற்று

இம்மை இல்வாழ்வில் நல்முறை ஒழுகுவான் என்றும்
மும்மையிலும் இன்பம் நாடிச் செலான்

தவஞ்செய்து அவ்வழியில் ஒழுகித் தவறான் வாழ்வு
தவத்தை விடவும் மேன்மையதே

அறம் என்பதே நல்ல இல்வாழ்க்கை ஆகுமே
பிறர் பழிப்பது இல்லாயின் அதுவே தகுமே

வாழ வேண்டிய முறைப்படி வாழ்வை விதித்துக் கொண்டவரே
தாழ்வின்றி தேவருக்கு ஒப்ப மதிக்கப்படுவரே

கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# கண்ணுக்குள் ஈரம்

அவள் விழிகளில் நான்
காதல் கோமாளியாய்

எந்தன் விழிகளின் ஈரம்
அவளுக்கு பரிகாசத்தின்
பார்வைகளாய்

தேடுகிறேன் எந்தன்
காதலை அவளின்
விழியின் மொழிகளில்

அவள் இமைகளில்
எனது காதலின் ஈரம்
கண்ணீர் போர்வைகளாய்

தினந்தோறும் சிலுவையில்
அறையப்பட்டு உயிர்த்தெழ
துடிக்கிறேன் காதலாய்

ஆனாலும் அநாதை
பிணமாய் எனது முகவரி
அவளின் விழிகளில்

கடைசிவரை எனது காதல்
கண்கள் தொலைத்த
பார்வைகளாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

இலங்கையிலே செம்மணிக்கு வாரீர் காணீர் ;
எண்ணற்ற புதைகுழியில் தமிழர் உயிர்கள் !
கலங்கிவெடிக் கும் உண்மைக் கண்ணீர் கதைகள் ;
காவலரே கொன்றிட்ட அப்பா வி மக்கள் !
உலகத்தார் கண்டிடாத கொடுமைக் கொலைகள் ;
ஒன்றாகப் புதை குழியில் குழந்தை மகளிர் !
குலம்முழுதும் அழித்திட்ட வன்ம வேட்டை ;
கூவியழும் தமிழருக்கு நீதி தாரீர் !



யாழ்ப்பாணக் குடாநாட்டில் புலிகள் அகன்றார் ;
ஈழத்து இராணுவத்தார் அத்து மீறல் !
காழ்ப்புணாச்சி கற்பழிப்பு நூற்றுக் கணக்கில் ;
கணக்கறியா புதை குழிகள் தோண்டின் புரியும் !
ஆழ்மனத்தில் அகன்றிடாத இரத்தக் கறையாம் ;
ஆண்டுதொண்ணுற் றாறினிலே மண்ணில் புதைத்தார்!
தாழ்மையோடு விண்ணப்பம் ; நீதி தாரீர் ;
சான்றுகளில் மன்ற ஆய்வு உண்மை கொணர்வீர் !

உழைப்பாலே இலங்கை நகர் வளப்பம் செய்தார் ;
ஓங்குவளர் தோட்டங்கள் மலையில் கண்டார் !
பிழைகொண்ட சட்டத்தால் சமத்து வமில்லை ;
பிரிவுபடும் தமிழ்ஈழம் கொள்கை ஏற்றார் !
தழைத்திட்ட தலைவரெல்லாம் கண்ணில் மறைந்தார் ;
தமிழ்நாட்டு அரசியலார் இன்னல் சேர்த்தார் !
விழைவாலே புலம்பெயர்ந்தும் ஒன்றாய் நிற்பார் ;
மீண்டுவரும் அரசியலும் தமிழர்க் (கு) ஆமோ ?

கவிஞர் ஆ சு கந்தன், திருவொற்றியூர், (சென்னை)

# காலை நேரத்துப் பூங்குயிலே

காலை கண் விழித்துப் பார்க்க
காதல் சொல்லும் வேளையில் என்னவன்
காதோரம் கதைச் சொல்லிட நாணத்தால்
காற்றும் தூதுச் சொல்ல பூங்குயிலும்
கானம் பாடிட செவிக்கு விருந்தாய்
காற்றாடியும் அசைந்திட கூந்தல் மணத்தில்
கார் முகிலும் மழை பொழிந்திட
காந்த கண்கள் அழகில் மயங்கி
காவியமாய் அவள் இதயத்தில் நின்றிட
காலங்கள் தான் பதில் சொல்லும்



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# கிராமத்துப் பெண்கள்

இன்று முதல் நாள்!
அந்த கிராமத்து பெண்
எனக்கு மிக அருகில்!
நாசியை நனைய வைத்த
தேங்காய் எண்ணெய் கலந்த வாசம்
ஈரான் ஈராக்கை வற்றிப் போகச் செய்யும்.
ஆங்கில கலப்படமில்லாத செயற்கைக்கோள்
கண்ட நிலவு அவள் முகம்.
அவளருகில் வெக்கப்பட்டு சிணுங்கிய
தொலைப்பேசி அவளை ஒரு கணம்
என்னை பார்க்க அனுமதி தந்தது!
கணினியின் விசைபலகையை முத்தமிட்ட
அவள் விரல்கள்! அவள் விரலே படாத
ஆண்ட்ராய்ட் அலைபேசியை
ஏளனப்படுத்தியது!
அந்த அயல்நாட்டு சந்தையின்
அடிமைக் கூட்டத்தில் -இளையராஜாவின்
தண்ணீர் ஓவியமாய் அவள் மட்டும்!
வைரமுத்துவின் கவிதையில் இன்னும்
பயன்படுத்தா தமிழ் சொல்லாய்
ஆச்சிர்யப்படுத்துகிறாள் என்னை!



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

அந்தி என்பது
அந்திமம் அல்ல.
விடியல் தரப்போகும்
அந்த நாளின்
நம்பிக்கை!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# வீரமா காளியம்மன்

வீரமாகாளியம்மன் சுயம்புவாக வீற்றிருக்கிறாள்
வீரமாகாளியம்மன் நினைத்த காரியத்தை
நடத்திக் கொடுக்கும் சக்தி கொண்டவள்
வாழ்வில் வீரமா காளியம்மன்
வீரங்களை வழங்கும் மகா சக்தியானவள்
வீரமாகாளியம்மன் கோரைப்பற்கள் கொண்டவள்
ஆதிசக்தியின் மகிமை கொண்டவள்
ஆயிரம் நாமங்களால்
உன்னை அர்ச்சனை செய்யும் போது
மனம் குளிர்ந்து கேட்ட வரங்களை
வழங்கும் அன்னையாவள்
தரணியில் தன்னலம் இல்ல
ஆளும் சக்தி கொண்டவள்
வலது காலை மடக்கி
கம்பீரமாக வீற்றிருக்கிறாள்
இடது காலை அசுரன் தலையில்
குத்தி வதம் செய்கிறாள்
சிவசக்தி அவதாரம் எட்டு கரங்களுடன்
காட்சி அளிக்கும் சக்தியானவள்
அம்மனின் வலது கரத்தில்
சூலம்,வாள், உடுக்கை,வேதாளம் கொண்டு
கையில் ஏந்தி இருக்கிறாள்
இடது கரத்தில் கேடயம் அங்குசம்,மணி,வரதம்,
கையில் கபாலம் ஏந்தி காட்சியளிக்கிறாள்
வீரமாகாளியம்மன் சாந்த சொரூபியானவள்
வீரமா காளியம்மன் தலையில்
வலது காது ஆணுக்குரிய நாகா பரணமும்
இடது காதில் பாம்படமும் அணிந்திருக்கிறாள்
வீரத்தை வழங்கும் வீர சக்தியானவள்
ஞானத்தை வணங்கும் ஞான சொரூபி
அன்னை அனுதினமும் உன் பாடி
பாதத்தில் மனதார வீரமாகாளியம்மன்
சரணடைகிறோம்!



கவிஞர் மா. நந்தினி, சேலம்

# ஆசைகள்



குழந்தையாய் இருக்கும் போது.
எல்லாவற்றையும் பார்த்து பிரமித்து போனேன்.
பல ஆசைகளை சிறிய வயதிலிருந்து.
சுமந்து வந்தேனே.
காலங்கள் மாற மாற விருப்பங்கள்.
வெறித்தனமாக மாறியதே.
செய்தி வாசிப்பவர்களை பார்த்து.
அதில் நாட்டம் கொண்டேனே.
என் ஆசான்களின் பெருமைகளை.
உணர்ந்த நான்.. ஒரு சிறந்த.
ஆசிரியராக பணிபுரிய வேண்டும் என்ற.
எண்ணத்தை வளர்த்து வந்தேனே.
நாட்டில் பல கொடுமையான செயல்களை.
கண்டதும் காவல் துறையில் சேர்த்தால்.
அநியாயங்களை தடுக்கலாம் என முடிவெடுத்தேன்.
சில மாற்றத்தினால் அந்த சிந்தையில்.
இருந்து விலகினேனே.
எண்ணற்ற கனவுகளை மனதில்.
புதைத்த நான்.
தற்போது இலட்சியமே இல்லாமல் திகழ்கிறனே!

கவிஞர் மோனிஷா

# இசைஞானி இளையராஜா



இசையே சூடிக்கொண்ட மகுடம் நீ!
அவசரமாக பிராணவாயு
தேவைப்படும் போதெல்லாம்
உன் ராக ஆலாபனையில்
இளைப்பாறிக்கொள்கிறது
துடிக்க மறந்த இதயங்கள்!

புறப்பட்ட புயல் அத்தனையும்
வலுவிழந்து போகிறது
உன் கீத மழை கானத்தில்!

இரவுகளைத் தின்று வளரும்
தனிமையின் நாக்குகள்
ஈரம் பூசி வானலில்லாய் மலரும் மாயம்
உனது ராகத்தைச் சூடியதால் நடக்கிறது!

இசைத் தாயின் கொலுமண்டபத்தில்
ஒற்றைக் கொடியாய்
பட்டொளி வீசிப் பறக்கும்
உனது வெற்றி முகவரியின்
ஈரத்தைப் பிரதியெடுத்து
தனதென தம்பட்டம் அடிக்கும்
தவளைகள் கூச்சல் மிகுந்தபோது
உனது மேற்கத்திய
இசைக்குறிப்பின் அதிசயத்தால்
சிட்டாகப் பறந்து வந்த
சிம்பொனிச் சிகரத்தின் மகுடம்
உனது சிரசை அலங்கரித்தது!

கால் தவறி இடறிய போதும்
கண் மலர் கீறிய போதும்
தாலாட்டு தோற்ற போதும்
தரணி போற்றிய போதும்
பரணியாய்ப் பரவி
தென்றலாய் வருடிச் செல்லும்
உனது இசை மட்டும் இல்லாவிடில்
பூமியில் அநேக
போதி மரங்கள் பூத்திருக்கும்!

உனது ராகத்தைச் சுவாசிப்பதால்
இயல்பாய் மனிதன் வீடுபேறு அடையும்
மாயம் நடக்கிறது!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# ஒரு கனவு உண்டு

உயிர்கட் அனைத்துக்கும் கனவு உண்டு
உயிர்களை தாங்கும் இந்த பூமிக்கும் அது உண்டு
உயிர்கள் ஜனிக்க எத்தனை கோடி ஆண்டுகள் ஆச்சு?
அதற்கு பிறகு தான் இது  இனிக்கும் கோள் ஆச்சு
ஒன்பது கோள்கள் கொண்ட குடும்பமிது
ஒன்பதில் ஒன்று மட்டும் கருவறை கொண்டது
காற்றும் நீரும் நெருப்பும் கலந்து உயிர் உருவாச்சு
ஆகாசமும் மண்ணும் அதற்கு அச்சாணி ஆச்சு

எந்த உயிராலும் தொல்லை இல்லை பூமிக்கு
அடங்காதவன் இவன் மட்டுமே சாமிக்கு
பூமியை சுற்றி மேலும் கீழும்
காற்று! நீர்! நெருப்பு!
உயிர்கள் மீது இல்லை வெறுப்பு
தொல்லை ஏதுமில்லை
தொலைந்து போக ஏதுமில்லை
கூடாமல் குறையாமல் கவசமாச்சு
எல்லாம் சேர்ந்து சுவாசமாச்சு!?



அதனதன் வாழ்வு அதனதன் கையில்
மனுஷ ஜந்து உருவாச்சு
மற்றதுக்கெல்லாம் எமனாச்சு
பஞ்ச பூதமும் பயந்து நடுங்குச்சு
ஆக்கத்திற்கு உண்டான ஆறாமறிவு
அழிவையே முன் மொழிகிறது
ஆவது எதவென தெரியாமல் தானே அழிகிறது
தனக்கே குழி தோண்டி பஞ்சமா பாதகம் புரிகிறது

கோடான கோடி  வயசு பூமிக்கு
நூறு வருஷமாத்தான் பைத்தியம்
பிடிச்சிருச்சு பாவிக்கு
ஆசை எனும் விஷம் முளைச்சு
பிரபஞ்சமே கருகிப் போச்சு
பூமிக்கொரு கனவு உண்டு
மனிதனை கழித்து விட்டு வாழ விழைவுண்டு
ஒரு சதவீத நீரையும் குடிச்சாச்சு
காற்றெல்லாம் விஷமாச்சு

இன்னும் என்ன தேடுகிறான்?
தொலைந்து போவது தெரியாமலே ஆடுகிறான்
கடைசி மரத்தையும் வெட்டி கடைசி மீனையும் பிடித்து
அதற்குள் இவனை முடித்து விட வேண்டும்
ஆலகால விஷத்தை அடியோடு சாய்த்து விட வேண்டும்

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# நான் வீழ்வேனென்று நினைத்தாயே

பாரதம் கண்ட பார்புகழ் மணியே
சீரான வரிகளில் சீர்படுத்தி நிலைத்தாயே
எட்டையபுர தாயால் எமக்களித்த நல்பிறவி
நாட்டையே திருப்பிய நாடறிந்த புத்தகமே

பாப்பா பாடல் தொடங்கி பல்விதமான புரட்சியால்
தப்பாமல் வடித்த தன்னிகரில்லா புலவரே
சுடராய் ஒளிர்ந்ததே சுறுவுறுப்பான எழுத்துமே
மடலாய் விரிந்ததே மண்ணில் நிலைத்ததே

மொழிப்பற்றை உலகுக்கு மொழிந்த எம்கலைஞனே
எழிலான புத்தகமாய் என்றும் இடம் பெற்றீரே
மண்ணிலே விதைத்த மகிமை சொல்லும்
பண்ணிலே முளைத்து பார்புகழ் வென்றதே

வீட்டுக்குள்ளே பெண்ணை விடுதலை யின்றியே
பூட்டி வைத்தவரை பூரணமாய் விலக்கினீரே
கருத்தான மொழியிலே கவிதைகளை விடித்து
ஒருமித்த வண்ணமாய் ஒளிர்ந்த நல்வாழ்வே



மொழிப்பற்றை உலகுக்கு மொழிந்த எம்கலைஞனே
எழிலான புத்தகமாய் என்றும் இடம் பெற்றீரே
மண்ணிலே விதைத்த மகிமை சொல்லும்
பண்ணிலே முளைத்து பார்புகழ் வென்றதே

அளவே குறையாத அட்சய பாத்திரமாய்
தெள்ளிய தமிழராய் தேர்ந்தீரே தமிழினத்தில்
உயர்ந்த சிந்தையாலே உலகில் வித்திட்டு
அயராது பாடுபட்ட அற்புத இமயமே

ஏட்டில் இணையில்லா ஏற்றிய விளக்காய்
பாட்டில் உயர்ந்த பாட்டனார் பெருமையே
மூட நம்பிக்கையின் மூடியைத் திறந்து
ஓட விட்டஉமை ஒருநாளும் மறவோமே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# நிதம் உன் நினைவு

நித்தம் உனை நினைக்கும் என் இதயம்
கதை கதையாய் பல கதை கூறும்
புதுமைகள் இல்லை ஏதும்
தினந்தோறும் வந்து
உறையாடும் அதே
அச்சிட்ட வரிகள்
இருந்தும் ஏனோ,
சலிக்கவில்லை அந்த போதை
செவிகளில் நீயே கீதை



காதல் செய்யும் மாயம்
கண்கள் எங்கும் ஈரம்
காதல் என்பது வீணே
காதல் செய்யாதே, என் அன்பே.
என உள்ளுக்குள் ஒரு குரல்
ஒளித்துக்கொண்டே இருந்தாலும்
தீராத இந்த போதை - உன்
நினைவுகள் மீது எனக்கு.

கவிஞர் இ. தேவர்மன், இலங்கை

# பாரதி ஒரு அதிசயம்

அறிவியல் வளர்ச்சிகள்
அதிசய கண்டுபிடிப்புகள்.
நாளுக்கு நாள் அதிசயம்
நம் நாடு அதிலே முன்னேற்றம்.

விஞ்ஞான கண்டுபிடிப்புகள்
ஏராளம் நாட்டிலே.
ராக்கெட் ஏவுகணையென
ஏற்றத்திலே நம் நாடு.

ஆனாலும் விலைவாசி
ராக்கெட்டையும் மிஞ்சும்
வேகம் மட்டும் குறையல.

பணவீக்கம் நாட்டிலே
தலைவிரித்து ஆடுது.
வாழும் ஏழை மக்கள்தான்
பரிதவித்து நிக்குது.

விலை நிலமெல்லாம்
குடியிருப்பா மாறித்தான் போகுது.
விலை பொருள் அத்தனையும்
பற்றாக்குறை ஆகுது.

வல்லரசு நாடென
வாய் கிழிய பேசுது.
விலைவாசி வானளவு
உயர உயரே போகுது.
ஏழை மக்க வாழ்வுதான்
புதைக்குழி யாகுது.



இயற்கையின் கொடையான
"காடு. மலை. மணல்" என
அத்தனையும் களவுதான் போனது.
மாதம் மும்மாரி மழை எல்லாம்
கனவாகி போச்சு.

நாளுக்கு நாள் விலைவாசி
"நஞ்சு" போல ஏறுது.
இந்த நிலை மாறுமோ
மனம் தான் ஏங்குது

நாள் ஒன்று போவதற்குள்
நான் படும் பாடலாம்
தறி படுமோ தாளம் போடுமோ என
இன்றைய நிலையை
அன்றே கணித்த "பாரதி ஒரு அதிசயம்".

கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# கடிகாரம்

வருடங்கள் ஒன்றொன் பின் ஒன்றாக
ஓடிக்கொண்டே இருக்கிறது

ஆனாலும் எந்த மாற்றும் இல்லாமல்
தனிமையில் கழிக்கிறது

சூழலும் கடிகாரமும்
எந்தன் மனமும்.



கவிஞர் கார்த்திகா, கோயம்புத்தூர்

# நான் கவிதை பித்தன்

அன்று நான் கவிதை பிரிய நானேன்
இன்று கவிதை பித்தன் ஆகிவிட்டேன்
கவி என்பது ரம்யமான உணர்வு
அதை அதே அழகாக்கி கொள்கிறது
தனிமைக்கு கை கொடுக்கும் உற்ற நண்பன்
கவிதை எழுத பின்னூட்டங்கள் பல என்னுள்
வாசிப்பின் மீது வந்த காதலே
வரிக்கு வரி ஏதோ சொந்த மொழி நடையில்
என் விரல்கள் தொட்டன
மகிழ்ச்சியடைந்தேன் என்னுள்,
தோன்றிய உணர்வுகளை
கற்பனையாக்கினேன்
காகிதத்தில் ஏனோ தானோ என
எழுத ஆரம்பித்தேன்
இன்றோ நான் கவிதை பித்தன் ஆகிவிட்டேன்
என் திறமைக்கான களத்தை
என் கவிதைகள் தேடித் தந்தன
விருட்சமாக விழுதுகளை சுமக்க வைத்த
இறைவனுக்கே முதற்கண் நன்றிகள்
அறிவு தந்திடும் ஏடுகள்தான்
என் கனவை சுமக்க வைத்தன
நான் இன்றோ கவிதை பித்தன் ஆகிவிட்டேன்.



கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், அக்குரணை (இலங்கை)

# என் கதாநாயகி நீ

பலரிடம் ஏமாறினேன்
வாழ்க்கையின் அனுபவம் என்றாயே அம்மா
என் மனது உடைந்து போதிலும்
எனக்கு நீ உக்கமளித்தாயே
நான் பல பிரச்சனைகளில்
சிக்கிக் கொண்டிருந்த போதிலும்
உன் வார்த்தையால்
என்னை அமைதிப்படுத்தினாயே



வலியில் வாடவும்
என்னை ஒருபோதும் நீ விடவில்லையே
எனக்கு உன் கரம் பிடித்து
நம்பிக்கை ஊட்டினாயே
காலம் செல்ல அனைத்தும்  மாறினாலும்,
உன் வேடமில்லா பாசம் என்றும் மாறவில்லையே
நீ என்னை திட்டினாலும்
என்னிடம் மன்னிப்பு கேட்பாயே
என்னுடன் சேர்ந்து
சிறப்பிள்ளை போன்று குறும்பு செய்வாயே

உன் பாசமழையில் எந்த வேசமும்
நான் கண்டதில்லையே
சமையல் அறையில் இடம் அளித்து
சமையலை கற்றுத் தந்தாயே
இயற்கையை ரசித்து
கவலையை மறக்கச் செய்தாயே
நீ எனக்கு தாயாக மட்டுமல்ல
என்னுயிர் நண்பியாகவும் இருக்கிறாய் அம்மா
என்னை விட்டு போகாதே உறவே

விழிரண்டு மூடினாலும் அங்கேயும் உன் முகமே
தாய் பாசம் ஒரு வகை காதல் தானே
நீ எனக்கு இறைவன் அளித்த வரமாய் கிடைத்தாயே
உனக்கு நான் என்ன நன்றி கடன் செய்வேனோ
உயிரிலும் மேலானவளே உனக்கு என் உயிரையும் பரிசளிப்பேன்

தேடாமல் கிடைத்த உறவு நீயம்மா
என் நிஜ தேவதை நீதான் அம்மா
கண்மணியே என் அன்பு அம்மா
கவி உனக்கே அம்மா சமர்ப்பணம்.

கவிஞர் அஹ்லா ஹபீப், அக்குறணை, கண்டி (இலங்கை)

# நீயின்றி நானேது

மாலையில் வீசிடும் தென்றலாய் நீ
தென்றலின் ஊடே ஊடுருவும் குளிர்ச்சியாய் நான்

காலையில் உதித்திடும் கதிரவனாய் நீ
இரவில் மிளிரும் முழுமதியாய் நான்

பஞ்சமது தீர்த்திடும் அமுத மழையாய் நீ
விவசாயிகளை மகிழ்விக்கும் விளைச்சலாய் நான்

அன்பு கொடுக்கும் வள்ளலாய் நீ
அதில் கட்டுண்டு கிடக்கும் காதலாய் நான்

உன்னை வைத்தே நானும் மகிழ்கிறேன்
நீயின்றி நானேது என்றே



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# வாழ்க்கை

நிராகரிப்பில் இருந்து
நிமிர்ந்து நில்
வலியில் இருந்து
வழியை தேடு
உடைக்கப்பட்டால்
உருகுலையாமல்
மீண்டும் வலிமையோடு எழு
உன்னை போல் நீ மட்டுமே
உனக்காக நீ மட்டுமே
வாழ்க்கை வாழ்வதற்கே
வாழ்ந்தே பார்ப்போம்!



கவிஞர் உஷா தங்கவேல், அரியலூர்

புல் பூண்டு
பூக்கள்
முதற்கொண்டு
அத்தனையும்
வண்ணமிழக்க
நிலா மட்டும்
அப்படியே
இருக்கிறது
கருப்பு வெள்ளை
கனவுகளில்



கோவில்
படிகள் ஏறி
பயணிக்கும்
கோடி
விளக்குகளை விட
வீட்டு
பூஜை அறையின்
ஒற்றை விளக்கு
அதிகமாய்
பிரகாசிக்கின்றது

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# வாழ்க்கையெனும் வயல்

இழப்பதற்கு இவ்வுலகில் ஏதுமில்லை
ஜனித்ததுமே இழந்தது தொப்புள்கொடி
கடைசியிலும் ஏதும் வரவுமில்லை
அறுக்கப்படுமே அரைஞாண் கயிறும்

நல்வாழ்வுக்காய் ஓடும் கால்கள்
ஓய்வுறும் ஓர் நாளிலே
அனுபவிக்காது சேமித்த வளங்கள்
அனுபவிக்கும் நாட்கள் சிறிதே

பிற்சந்ததியின் வாழ்வுக்காய் அழிப்பதென்ன
நாமே நம் வாழ்வினை
நம்மோடு பயணிக்குமா பேறுகள்
காலம் நிறைவேறும் போதிலே

வாழும் காலம் மகிழ்வாக
நம்மோடு நம்மை பாதுகாக்கனும்
வாழ்க்கை எந்நாளும் நமதாக
நாமாக நாம் வாழனும்

எதிர்காலம் என்றும் கணிக்காது
பலம் கொண்ட மனது
பொற்காலம் காணுமே இவ்வுலகில்
இறைவனோடு இணைந்த உறவில்

உயிரோடு உயிர் வாழ பிரயாசப்படு
உனக்காக உன்னில் தவம் கொள்
உதவாத உலக வாழ்வை உதறிடு
உண்மையாய் உனக்கு நீ வாழ்!



கவிஞர் செல்வக்குமரன் சுரேஷ்குமார், சீனா

# வார்த்தைகளற்ற உலகம்

படங்களின் வழியே கதைகளைச் சொல்ல
இடமளிக்கும் உலகம்! ஓவியங்கள், குறியீடுகள்
வடிவங்களில் வார்த்தைகளின்றி உணர்வுப் பரிமாற்றம்!
பலவிதமான சைகைகள் வழியாக வார்த்தைகளில்லா
உலகத்தில் தகவல் பரிமாற்றம்! இசைவடிவில்
ஒலிகளின் வழியே உணர்வுப் பரிமாற்றம்!
அலைகளின் அசைவு பலகதைகள் உரைத்திடுமே!
மலர்கள் மணத்தாலே உணர்வுகளைப் பகிர்ந்திடுமே!
உலகெங்கும் காதலர்களின் பார்வைப் பரிமாற்றம்
பலகதைகள் உரைத்திடும்! வார்த்தைகள் மூர்ச்சையாகும்!
வலிமிகுந்த உள்ளத்தின் வெளிப்பாடாய் வழிந்தோடும்
கண்ணீர் உரைத்திட வார்த்தையின்றி பெருக்கெடுக்கும்!
புன்னகையைப் பரிமாறும் குழந்தைகள்! கருணைமிகு
கண்கள், துன்பத்தில் தோள்தந்து அரவணைக்கும்
நண்பனின் கைகள், பிரிந்தவர் சேர்கையில்
ஆங்கே நிலவிடும் அர்த்தமுள்ள அமைதி,
உண்மையை உரக்கச் சொல்லிடும் இதயம்,
தன்னம்பிக்கை வளர்க்கும் நாளும் புதுவிடியல்
பரந்து விரிந்த நீலவானம், கவலை சூழ்வதுபோல்
கருத்த மேகங்கள், கரவாமல் பெய்தபின்னர்
வெளுத்திடும் வானம், இவையெல்லாம் மனிதர்க்கு
வெளிப்படுத்தும் செய்திபல! வார்த்தைகளற்ற உலகமவை!



கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

# தனிமை

எளிதில்
எல்லோராலும்
ஏற்றுக்கொள்ள
இயலாத சொர்க்கமே
தனிமை

பந்தங்கள் கடந்த
பற்றற்ற மனமுதிர்ச்சி
பக்குவப்பட்டவர்களையிது
பாங்கோடு வழிநடத்தும்

தோல்விகளாலும்
துரோகங்களாலும் இவர்களைத்
தோற்க இயலாது

ஒவ்வொரு நிமிடங்களையும்
ரசித்து வாழும்
விசித்திர குணம்
நதிபோல நகர்ந்திடுவர்



இயற்கை இவர்களுடன் பேசும்
அஃறிணைகள் அன்பு செலுத்தும்
இவர்களுலகம்
ஆச்சர்யங்களாலும் அதிசயங்களாலும்
நிறைந்ததே


இப்பாதை தனக்கானதென்று
தடுமாறாமல் சென்று கொண்டே இருப்பர்

இத்தனிமையை ஏற்க
தைரியமிருந்தால்
வழியெங்கும்
பூ மலரும்
இறுதிவரை உறுதி இருக்கும்

கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# தொலைவில் அவள்

அன்று
நாம் கண்டு கொண்ட
இரு கண்களுக்கு இடையே.
இடைவெளி மட்டுமே
இடையூறு என்னவளே!
உன் மனம் என் மனம்
களவில் என்றுமே.
இடைவெளி இல்லா காதல்
கண்மணி அவளே!



கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்

# அணு

அணுவின் வீச்சு
புற்றுநோய்க்கு மருந்து

அணு உலைகள்
மின்சாரம் தயாரிப்பு

அணு குண்டுகள்
ஆற்றல் வெளிப்பாடு

அணுவின் கதிரியக்கக்
கதிர்களால் விவசாயம்

அணுவே உழைப்புக்கு
கைகொடுக்கும் ஆயுதம்

அணுவின் பெருமை
பழமையிலும் ஆற்றல்

அணுக்குள் உலகமுண்டு
பாரதியார் கூற்று

அணுவின் நுணுக்கம்
சூரியக் குடும்பம்



கவிஞர் எச். டீ. எச் பஹீதா, கொழும்பு

## யார் சொன்னது?

உன்னால் முடியும்
என்ற வார்த்தையில்
உள்ளத்தின் நம்பிக்கை


அற்புதமான
சிறப்பான பணி
என்ற சொற்களில்
வானத்தில் பறக்கும்
மனது

இப்படிஎ ல்லாமா
சொதப்புவே
என்ற பேச்சில்
நொறுங்கிப் போகும்
உள்ளம்

காலத்தே செய்த உதவிக்கு
நீ நல்லா இருப்பே
என்ற வாழ்த்தில்
நெகிழும் மனது

யார் சொன்னது
காற்றில் கரைபவன
வார்த்தைகள் என்று

****



## அதையும் தாண்டி

எதிர்பார்ப்பின்
விடையில்

செயலுக்கான
முடிவில்

சாதகமா
பாதகமாவையும்
தாண்டி

அதையே
சுற்றிசுற்றி வந்த
எண்ணங்களிலிருந்தும்

வேறு எதையும்
நோக்கமறுக்கும்
பார்வையிலிருந்தும்

இதைப் பற்றியே
பேசிக்கொண்டிருக்கும்
உதட்டு மொழியிலிருந்தும்

விடுதலை! விடுதலை

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

பெண் என்பவள்
இதயமில்லா ஆண்
இரக்கமில்லா பெண்
***



பாட்டிகளுக்கு
ஹெட்போன் எல்லாம்
மாய மந்திரம்
***

சிப்பிக்குள்
சொத்து
முத்து
***

சைக்கிள் பெல்
சப்தமெல்லாம் கேட்பதே இல்லை
ஆரோக்கியத்தை அலங்கரிக்கும் மணி அது..
***

சங்கு பூச்சி
இறந்த பின்னும்
சங்கில் சப்தம் வருகிறதே ?
***

தினமும்
மூச்சிரைக்க ஓடுங்கள்
சாவு நெருங்காது
***

கட்டுடல் மேனி
வருடக்கணக்கில்
கட்டப்பட்டது
***

சாதிகளே தவறாம்
இதில் மோதி பார்த்தல் வேறு
நாசமாய் போங்கள்
***

ஆடுறா ராமா என்பது
அவன் பிழைப்பு
அங்கு சென்று
இந்துத்துவம் பேச வேண்டாமே
***

ட்விட்டர் பறவை
முட்டை போடுமா?
***

என்னவள் மீது
எங்கேயோ கொண்ட
வாசம்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

## மன ஆரோக்கியமே பெரும் செல்வம்



இன்றைய கால கட்டத்தில், நாம் நம் உடல் ஆரோக்கியத்திற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை விட, மன ஆரோக்கியத்துக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் மிகக் குறைவாகவே உள்ளது. போட்டியும், சவால்களும் நிறைந்த இந்த வாழ்வில் வேலைப் பளு, சமூக ஊடகங்களின் தாக்கம், தோல்வி, ஏமாற்றம் எனப் பல காரணங்களால் மன அழுத்தம், பதற்றம், மனச்சோர்வு போன்ற பிரச்சனைகள் அதிகரித்துள்ளன. ஆனால், ஒரு தனிப்பட்டவரின் மகிழ்ச்சியான மற்றும் திருப்தியான வாழ்க்கைக்கு ஆரோக்கியமான மனம் மிக அவசியம். உடல் நலன் மட்டுமல்ல, மன நலனும் ஒரு மாபெரும் செல்வம் என்பதை நாம் உணர வேண்டும்.

## மன ஆரோக்கியம் என்றால் என்ன ?

மன ஆரோக்கியம் என்பது வெறும் மனம் சம்பந்தப்பட்ட நோய்கள் எதுவும் இல்லாமல் இருப்பது மட்டுமல்ல. அது நம் மனதை ஒரு நிலைப்படுத்தி சவால்களை எதிர்கொள்வது, நம் மனதை என்றும் சமநிலையில் வைத்திருப்பது, உறவுகளோடு பரஸ்பரம் கொள்வது. ஒரு ஆரோக்கியமான மனம் இருந்தால் தான், நாம் வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்க முடியும்.

உடல் நலமாக இருந்தால் அனைத்தும் சரியாகிவிடும் மன நலன் ஏன் அவசியம் என்று பலர் மனதிலும் கேள்விகள் இருக்கும். உறவுகளுடன் கலந்துரையாடி அவர்களின் அன்பையும் ஆதரவையும் பெற மனநலன் அவசியம் அதாவது நம் மனம் நலமாக இருந்தால்தான், நம்மோடு கதைக்கும் உறவினர்களின் உணர்வுகளைப் புரிந்து

கவிஞர் ரஸ்னா ரம்ஸான், கண்டி, அக்குறணை (இலங்கை)

கொண்டு,அனைவரிடமும் நல்லுறவை பேண முடியும். இல்லையென்றால் நம் மனம் சோர்வாக இருக்கையில் அவர்கள் எதைப்பற்றி பேசினாலும் நம் சிந்தனை வேறு எங்கேயோ சிதறிக்கிடக்கும் இதனால் அவ்வுறவுக்குள் பிரச்சனைகள் வருவதற்கும் வாய்ப்புகள் அதிகம் மனம் காயப்பட சிறு சிறு ஏமாற்றங்கள் தோல்விகளே போது நம் நெருங்கிய உறவு ஒரு நாள் நம்மோடு பேசாது நம் அழைப்புகளை கவனிக்காது இருக்கும் தருணம் நம்மை எவ்வளவு காயப்படுமனதில் அலுத்தங்கள் இல்லாத தருணங்களில் மனம் சோர்வடைந்து விடும் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள் அந்நேரம் நாம் இயல்பை உணர முடியாத நிலையில் இருப்போம் அவர் மீண்டும் பேசிய பின் தான் நாம் இயல்பை அடைவோம். இப்படியே தொடர் மன அழுத்தங்கள் நம்மை தாக்கையில் நாமும் சோர்வடைந்து விடுவதால் தான் பல மனம் சம்மந்தப்பட்ட வியாதிகள் நம்மை சுற்றி வலைக்கின்றன.

உடல் வியாதிகளை குணப்படுத்த நாம் மருந்து குடிக்கிறோம் மன அழுத்தங்களுக்கு என்ன செய்வது மன வியாதிகள் நம்மை நெருங்க முன் நாம் எவ்வாறு அதிலிருந்து நம்மை தற்காத்து கொள்வது? என்ற வினாக்கள் நம்மில் தோன்றும்.

## மன அலுத்தத்தை எதிர்கொள்வது எப்படி ?

மன அலுத்தம் நம்மை அன்டியிருக்கும் போது யார் ஆறுதல் கூறினால் நம் மனது ஏற்காது ஆனால் நாம் அப்படியே அமர்ந்திருப்பது நீடிக்காது நம் அன்றாட வேலைகளை செய்து தானே ஆக வேண்டும். நாம் அத்தருணத்தில் மிக சோர்ந்து போயிருப்போம் கடமைக்காவேண்டி தான் நம் வேலைகளை பார்ப்போம் உண்மையான நிம்மதி, சந்தோசம் நம்மில் இருக்காது ஆனால் நாம் நினைத்தால் நம்மை ஒரு அளவிற்கேனும் இயல்பாய் மாற்றலாம்.

நாம் நிகழ்ந்ததை நினைத்து கண்ணீர் வடிப்பதை விட்டு அதை ஏற்றுக் கள்ள முயற்சிக்க வேண்டும் நமக்கானது நமக்கு நிச்சயம் நமக்கு கிடைக்கும் என்ற எண்ணத்தோடு விழி மூடி அமர்ந்து அமைதியாக மூச்சை நன்கு

கவிஞர் ரீஸ்னா ரமீஸான், கண்டி, அக்குறணை(இலங்கை)

இழுத்து விட்டு மனதை ஒருநிலைப்படுத்தி தினமும் உடற்பயிற்சி, யோகா போன்றவற்றில் ஈடுபடுவதால் நம் மனம் அமைதியடையும்.

மன அழுத்தத்தின் போது யாரிடமும் பேசுவதை விட்டு தனியாய் இருப்பதற்கே மனம் பெரிதும் முக்கியத்துவம் கொடுக்கும் இச்சந்தர்ப்பங்களின் தனிமையாக இருப்பது பெரும் ஆபத்தானது.
தனிமை எதிர்மறையான சிந்தனைகளைத் தூண்டி நம்மை இன்னும் குழப்பி விடும். அதனால் நமக்கு நெருக்கமான நபர்கள் அதாவது நண்பர்கள், குடும்பத்தினர் இவர்களுடன் நேரத்தை செலவிடுதல் மிக முக்கியமானதும் நல்லதும் ஆகும்.

நாம் என்ன செய்தாலும் நாம் வேலையின்றி இருக்கும் சமயத்தில் எதிர்மறையான சிந்தனைகள் நம்மை நெருங்க கூடும் ஆகவே அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நமக்கு பிடித்த பொழுது போக்கு செயற்பாடுகளில் ஈடுபடுவது மனதை வேறு திசைக்கு திருப்பும். புத்தகம் படிப்பது, இசை கேட்பது, கவிதை எழுதுவது, புதிய விடயங்களைக் கற்றுக் கொள்வது, இயற்கையை ரசிப்பதுபோன்ற செயல்கள் மனதிற்கு மகிழ்ச்சி தரும். இது ஒரு விதமான மன detox போல செயல்படும்.

இப்படிப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டும் நம் மன அலுத்தம் அதிகரித்தால் உடல் நிலை சரியற்ற நிலையில் மருத்துவரை அனுகுவது போல மனதின் ஆரோக்கியத்தை தக்க வைக்க மன நல ஆலோசகரின் உதவியை நாடுவது சிறந்தது.

எனவே மனநலனை அவரவர் தான் ஆரோக்கயமாக வைத்துக்கொள்ள முன்வர வேண்டும். நான் முன்பு கூறியதைப்போல உடல் நலமாக இருந்தால் போதும் மன நலன் தானாகவே சரியாகிவிடும். என்ற தவறான எண்ணம் நம் சமூகத்தில் ஆழமாக பதிந்திருக்கிறது. மன அழுத்தம், பதற்றம், அல்லது மனச்சோர்வு போன்ற பிரச்சனைகள் ஏற்படுகையில், அதை "மனம் பலவீனமாக இருக்கிறது" என்று பலரும் நினைக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் இருப்பவர்களை தேற்றுவதை விட்டு அவர்களை

கவிஞர் ரீஸ்னா ரம்ஸான், கிண்ணியா, அக்குறணை (இலங்கை)

இன்னும் காயம்படுத்தும்படி விமர்சனம் செய்பவரகளே அதிகம்.

காய்ச்சல், சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் போன்ற உடல் வியாதிகளுக்கு எப்படி மருத்துவரை அணுகுகிறோமோ, அதேபோல மனதின் ஆரோக்கியத்திற்கு மனநல ஆலோசகரை அணுகுவது பலவீனமல்ல நம்மை நாமே தேற்றிக்கொள்ள எடுக்கு நடவடிக்கைதான்.

நமது உடலைப் போலவே நமது மனதையும் அக்கறையுடன் பாதுகாக்க வேண்டியது நம் கடமை ஆகும். உடல் நலன், சமூகத் தொடர்பு, ஆரோக்கியமான பழக்கவழக்கங்கள், மற்றும் தேவைப்பட்டால் மனநல நிபுணர்களின் ஆலோசனை என பலதில் கவனம் செலுத்தினால் தான் மனம் சம்பந்தப்பட்ட பல பெரிய பிரச்சனைகளிலிருந்து நம்மை காத்துக் கொள்ள முடியும்.

ஒரு ஆரோக்கியமான, அமைதியான மனம் இருந்தால் மட்டுமே, நாம் வாழ்க்கையின் மகிழ்ச்சியை முழுமையாக அனுபவிக்க முடியும், உறவுகளைப் பேண முடியும், மற்றும் நமது இலக்குகளை நோக்கி நம்பிக்கையுடன் பயணிக்க முடியும். மனநல விழிப்புணர்வை நாம் மட்டும் அல்ல அனைவரும் உணரந்து நல் முறையில் நடக்க நம்மாலான முயற்சிகளை நிச்சயம் மேற்கொள்ள வேண்டும்.



கவிஞர் ரீஸ்னா ரமீஸான், கிண்ணியா, அக்குறணை (இலங்கை)

# அப்பாவின் ஊன்றுகோல்

## நூல் அனுபவம் — கவிதைத் தொகுப்பு




**நா மயிலவன்; முதல் பதிப்பு ஆகஸ்ட் 2025; பக்கம் 80 ;
விலை ரூபாய் 100; வெளியீடு ஸ்ரீ சக்தி வெளியீடு மகாலிங்கபுரம் பொள்ளாச்சி ; தொடர்புக்கு 9865261110**

**1. ஒரு நத்தையின் நடை பயணம் நாயுருவி, 2. மௌனத்தின் மொழி, 3.மகரந்தச் சேர்க்கை 4. பழுத்த இலையின் புன்னகை - ஆகிய ஐந்து கவிதைத் தொகுப்புகளை வெளியிட்ட மயிலவன் அவர்கள் தலைமை ஆசிரியர் பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்.**

**"அப்பாவின் ஊன்றுகோல் எனது பூஜை அறைப் பொக்கிஷங்களில் ஒன்று. நான் பெற்ற பட்டங்களுக்கு சாட்சி. நம்பிக்கை நட்சத்திரம். உழைப்பின் ஊற்று. முன்னேற்றத்தின் முன்னோடி. அப்பாவின் மூன்றாவது கால். நடந்து செல்லும் பாதையில் உள்ள மேடு பள்ளங்களைக் காட்டி தட்டுத் தடுமாறி கீழே விழாமல் தாங்கும் துணைவன். அது அவருக்கு ஒரு வழிகாட்டி" என்று தனது முன்னுரையில் ஆசிரியர் குறிப்பிட்டிருப்பதைப் போலவே தன்னை வளர்த்து ஆளாக்கி இந்த உலகிற்கு நல்லதொரு குடிமகனாக உலக விட்ட தந்தைக்கு இந்த நூலை சமர்ப்பணம் செய்திருக்கிறார் ஆசிரியர். எளிமையான மொழியிலும் வலிமையான கருத்துக்களை புகுத்தி நகைச்சுவையுடனும் தொடர்ந்து மனதில் ஊறும் அன்பிலும் காதலிலும் தன்னை நிலைத்துக் கொண்டு காற்றாய் நீராய் அவசியமானதொரு எழுத்துச் சித்திரத்தை அப்பாவின் ஊன்றுகோலில் எழுதி இருக்கிறார் ஆசிரியர்.**

**உழைப்பு ஒன்றே மனிதனை மேன்மைப்படுத்தும் மிகச்சிறந்த ஆயுதம் என்பதையும் கல்வியின் வழியே தனது எல்லா கனவுகளையும் நிறைவேற்றிக் கொள்ள மனிதனுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும் என்பதையும் தொடர்ந்து உழைத்துக் கொண்டே இருப்பவர்களே**

கவிஞர் இளையவன் சிவா

உற்சாகமாக இருப்பார்கள் என்பதையும் நூலின் கவிதைகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

ஒவ்வொரு பிள்ளைகளும் தங்களது பெற்றோர்களின் பொறுப்பையும் கவனத்தையும் தங்களை வளர்த்து ஆளாக்குவதற்கு அவர்கள் பட்ட இன்னல்களையும் உணர்ந்து கொள்வதற்கு அவர்கள் பெற்றோர்களாக மாறும்போதே அந்த வலியும் வேதனையும் தெரியும் என்பார்கள்.. தொடர்ந்து எதிர்வரும் தலைமுறையினருக்கு அறிவுரையாகவும் எழுத்தாகவும் எழுதி வைத்தாலும் தான் படும் அனுபவங்களால் மட்டுமே ஒவ்வொரு மனிதனும் பிறரின் வேதனையை அறிய முடிகிறது. அந்த வகையில் இந்த நூலிலும் தனது பெற்றோர் பெற்ற துன்பங்களையும் பிள்ளைகளை வளர்ப்பதற்கு அவர்கள் கொடுத்த உழைப்பினையும் மிகச் சிறப்பான வரிகளில் எடுத்து இயம்புகிறார் மயிலவன் அவர்கள்.

பணி ஓய்வு பெற்று இருபது ஆண்டுகளாகியும் தனது மனைவியின் மீது காட்டும் பேரன்பும் பெருங்காதலும் நூலில் நல்லதொரு காதல் கவிதைகளை அவரை எழுத வைத்திருக்கிறது. ஆம் காதலுக்கு வயதில்லை தானே. காற்றும் காதலும் எப்போதும் நமக்குள் ஓடிக் கொண்டே இருந்தால் மட்டுமே வாழ்வில் நிலைத்திருக்க முடியும் என்பதை கவிஞர் இந்த நூலில் எழுதி இருக்கும் காதல் கவிதைகள் நிரூபித்து இருக்கின்றன.

நூலின் நிறைய கவிதைகள் தனது தந்தையின் நினைவுகளைப் போற்றும் வண்ணமும் தன்னை ஆளாக்குவதற்கு அவர் எவ்வளவு தூரம் உழைத்தார் என்பதையும் அதை கவிஞர் எப்படி புரிந்து கொண்டார் என்பதையும் அழகாக எடுத்துரைக்கின்றன. வெயிலின் அருமை நிழலில் தான் தெரியும் என்பார்கள். அதே போல் பெற்றோர்களினுடைய உழைப்பும் வழிகாட்டுதலும் அவர்கள் உயிருடன் இருக்கும் போது நாம் உணர்ந்து கொள்வதை விட அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்த பிறகு அதை எண்ணி எண்ணி உணர்ந்து வேதனைப்படுவதே அதிகம். அத்தகு அனுபவங்களை நூலின் நிறைய கவிதைகள் நமக்குள் கண்ணீரையும் வரவழைத்து அவரவர் பெற்றோர் மீதான பாசத்தையும் நேசத்தையும் உணர்த்தி விடுகின்றன.

கவிஞர் இளையவன் சிவா

அன்பு, பாசம், காதல், நட்பு, உழைப்பு, விவசாயம், நாட்டுப்பற்று, தேசத்தின் மீதான தொடர்ச்சியான அக்கறை, இயற்கையின் மீதான நேசம், சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான ஆசை, நடைபயண நண்பர்கள் மீதான நட்பு, கால்நடைகள் வளர்ப்பதன் அவசியம், சமையலறைக் கருவிகள் இன்று சமையலில் ஏற்படுத்தும் தாக்கத்தின் மீதான எதிர்பார்ப்பு, தீண்டாமையின் மீதான கடுங்கோபம், தேர்தல் அரசியலின் மீதான ரௌத்திரம் என நூலின் கவிதைகள் பல்வேறு தளங்களை தொட்டுச் செல்கின்றன

பெரும்பாலும் கவிஞர்களுக்கு கடவுள் மீது நம்பிக்கை குறைவாகவே காணப்படும். ஏனென்றால் அவர்கள் உழைப்பையும் உழைக்கும் மக்களையும் கடவுளாக வணங்குபவர்கள். நிகழ்காலத்தின் மனிதர்களை அவர்கள் நேசிப்பவர்கள். கண்ணுக்குத் தெரியாத கடவுள் மீது காட்டும் கருணையை விட கண்ணெதிரே இருக்கும் மனிதர்கள் மீது காட்டும் பேரன்பே உலகத்தின் சுழற்சியை சமமாக இயக்கவல்லது என்பதை கவிஞர்கள் அவ்வப்போது உணர்த்திக் கொண்டே இருப்பார்கள்.

"கடவுளைக் கண்டதில்லை என்று பொய் சொல்லாதீர்கள் எல்லோரும்
கடவுளைப் பாருங்கள் அப்பா அம்மா உருவில்"
என்ற இவரது கவிதையே அதற்கு சிறந்ததொரு காட்சியாக நிலைத்து விடுகிறது.

"தேர்தல் வரட்டும்
சேலையும் கொலுசும்
அரிசியும் பருப்பும்
வீடு தேடி வரும்
அதுவரைக்கும்
கொஞ்சம்
அணைத்தே வை
பற்றியெரியும் அடுப்பையும் வயிறையும்"

என்று சமகால அரசியல் மீது இவருக்கு இருக்கும் பெருங்கோபம் நம் எல்லோருக்கும் பற்றிக்கொள்ள வேண்டும் என்ற நெருப்புப் பொறியாக விழுந்திருக்கிறது இந்த நூலில். வாக்கு சேகரிப்பதற்காக இலவசங்களை அள்ளி வழங்கி வெற்றி பெற்றவுடன் செலவழித்த அனைத்தையும் மக்களிடமிருந்து சுரண்டும் அரசியல்வாதிகளுக்கும் இலவசங்களைத் தேடி ஓடும் மக்களுக்கும் இந்தக் கவிதை நல்லதொரு சவுக்கடி.

இன்றைய நவீன யுகம் பல்வேறு கருவிகளை மனிதர்களின் உழைப்பிற்காக கண்டுபிடித்து ஒப்படைத்தாலும் அவற்றின் நன்மை தீமைகளையும் மனிதர்கள் ஆராய்ந்து பார்த்தல் மிக அவசியம். ஒவ்வொரு வீடுகளிலும் மனிதர்களின் பொன்னான நேரத்தை திருடிக் கொண்டிருக்கும் தொலைக்காட்சியின் அவஸ்தைகளை அழகாகப் பட்டியலிடுகிறது ஒரு கவிதை. தேவைப்படும் நேரத்தில் கிடைக்காத உணவும் தேவைப்படும் போது கிடைக்காத நேசமும் பயனற்றுப் போகும் என்பதை தொலைக்காட்சித் தொடர்களின் வழியாக ஒவ்வொரு வீடுகளுக்குள்ளும் நடந்துவரும் அவலங்களை இந்த கவிதை தோழுரித்திருக்கிறது.

" அன்னத்திற்கு கல்யாணம் நடக்குமா நடக்காதா அதைப்பற்றிய கவலை
அவன் அவளுக்கு உங்களுக்கு என்ன காப்பி வேண்டி கிடக்குது
எனக்கல்ல
நண்பர் வந்திருக்கிறார் காத்திருந்தோம்
எப்போதும் போல்
இடைவேளை விளம்பரத்திற்கு நன்றி
தொடர் நாடக விளம்பரத்திற்கு"

இரவு நேரங்களில் ஒவ்வொரு வீடுகளிலும் விளம்பர இடைவேளைகளில்தான் நமக்கு உணவு கிடைக்கும் என்பதையும் ஒவ்வொரு தொடர்களும் பெண்களின் மனதிற்குள் மிகப்பெரிய ஆதிக்கத்தை செலுத்தி வருகின்றன என்பதையும் இந்தக் கவிதை எடுத்துக்காட்டுகிறது.

"வயிறு நிறைந்த புறா
வந்து போன அடையாளமாக விட்டுச் செல்கிறது இறகை உன்னிடம் தர
இறகைத் தவிர ஒன்றுமில்லை"

இந்தக் கவிதையின் ரசனையை எண்ணிப் பார்க்கையில் கவிஞரின் அவதானிக்கும் பண்பும் இயற்கையை ரசிக்கும் பாங்கும் அழகே வெளிப்படுகின்றன. புறாவிற்கு உதவும் மனதிற்கு புறா செலுத்தும் நன்றியாகவும் இதை எடுத்துக் கொள்ளலாம். இறகைத் தவிர பரிசளிப்பதற்கு புறாவிடம் எதுவும் இல்லை என்பதல்ல அந்த இறகினையே அதனுடைய மிகச்சிறந்த பரிசாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

"ஊதாரியாய்
ஊர் சுற்றித்திரிந்த என்னையும்
உழைக்க வைத்தது
உன் இறப்பு.
இருக்கும்போது சொன்னாய் உழைக்கச் சொல்லி. இப்போதுதான் தெரிகிறது
எனக்கு சோறு
எப்படிப் போட்டாய் என்று"

இந்தக் கவிதையே அப்பாவின் வழிகாட்டுதலையும் வாழ்வின் கட்டமைப்பையும் தனது வாரிசுகளுக்காக அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளையும் நாம் எப்படி புரிந்து கொண்டோம் என்பதையும் படம் பிடிக்கிறது.

"கடன் கொடுத்த
கந்து வட்டிக்காரன்
அவனின் தன்மானத்தை விட்டு கத்துகிறான்
வீதி முழுக்க வேடிக்கை தன்மானம் ஏலம் போனது வெளிநாடு போன
பையன் பணம் அனுப்பவில்லை
இரவில் படுத்தவர்
எழவே இல்லை
கந்துவட்டி காசில்
வெளிநாடு போனவன் இறுதிச்சடங்குக்குக் கூட

வரவே இல்லை
கவரிமான் ஜாதி அவன்"

வட்டியின் கொடுமை வறுமையின் நாவை மேலும் மேலும் நெருப்புக்குள்ளாக்கி பொசுக்கி விடுகிறது என்பதையும் வெளிநாட்டு பயணங்கள் பெற்றோர்களின் இறுதிக் காலத்தை எப்படி எலலாம் தவிக்க விடுகிறது என்பதையும் இந்தக் கவிதை எடுத்துக் கூறுகிறது..

"அவள் கட்டி முடிந்த கூந்தலை
கலைத்துச் சென்றது காற்று. காற்றுக்கும்
நாகரீகத்தின் மீது மோகமாம்."

காதல் கவிதையில் தனது அன்பை முழுவதுமாக பரிமாறி இருக்கும் கவிஞருக்கு அவளின் நாகரீகத்தின் மீதும் ஏற்பட்டிருக்கும் மோகத்தை நம்மால் உணர முடிகிறது.

பழங்கால சமையல் முறைகளில் உரல் உலக்கை ஆட்டாங்கல் போன்றவை சிறப்பான இடம் பிடித்தன. அன்றைய பெண்களுக்கு சமையல் வேலையில் அதிகம் கை கொடுத்து உதவியவை இவை. ஆனால் இன்று பெண்களும் வேலைக்குச் சென்று குடும்பத்தை பொருளாதாரத்தின் வழியாக உயர்த்திப் பிடிக்க வேண்டி ஓடிக் கொண்டிருப்பதால் சமையல் என்பதில் நேரத்தை குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். பாட்டிகள் செய்து கொடுத்த பலகாரங்களும் நிலக்கடலை உருண்டைகளும் எப்படி நமக்கு மனதிற்குள் இன்னும் இனித்துக் கொண்டிருக்கிறதோ அதேபோல இன்றைக்கும் கிடைக்குமா என்ற ஏக்கம் நமக்குள் எதிரொலப்பதை தவிர்க்க முடியாது. அதையே அந்த பொருட்களும் ஏங்கி நிற்பதாக சொல்லும் இந்த கவிதை அஃறினைகளும் ஆவல் கொள்ளும் என்பதற்கு சாட்சியாகிறது.

"பேரன் பேத்தி எடுத்த எங்களுக்கு ஆத்தாத்தாக் கிழவி இடித்து தந்த
நிலக்கடலை உருண்டை மணம் நினைவில் நிற்க
உரலும் உலக்கையும் ஏங்கி நிற்பதில்
ஆச்சரியம் இல்லை"

கவிஞர் இளையவன் சிவா

"பல நாள் பழகிய கிளி
பெயர் சொல்லி அழைக்கிறது
அம்மா அப்பா அக்கா
சொல்லிச் சொல்லி அழைக்கிறது.
சின்னப் பையன் திறந்து விட்டான்
பறந்து போன கிளியே
சுதந்திரக் காற்றை சுவாசிக்கிறது
'நன்றி' என்ற சொல்லை
மட்டும் கற்க மறந்தது" - இந்தக் கவிதை கிளிகளுக்காக மட்டுமே எழுதப்பட்டது அல்ல விடுதலையை வேண்டி காத்திருக்கும் ஒவ்வொரு மனிதரும் அதை அடைந்த பின்னர் அதற்கான தியாகத்தை எண்ணிப் பார்க்கிறார்களா என்பதையும் சொல்லிச் செல்கிறததுதானே.

"ஆணவம் உள்ளவன் ஆண்டவனை இழக்கிறான் பொறாமைக்காரன் உறவை இழக்கிறான் கோவக்காரன் அவனையே இழக்கிறான்
உனக்கு எப்பொழுதெல்லாம் கோபம் வருகிறதோ அப்போதெல்லாம் கேள் புத்தன் ஆகிவிடு."

பேசுவதை விட கவனிப்பதிலும் கேட்பதிலும் அதிக ஆர்வம் கொள்ளுங்கள் என்பதற்காகவே இயற்கை மனிதனுக்கு காதையும் கண்ணையும் இரண்டாகப் படைத்திருக்கிறது என்பார்கள். ஆனால் இந்தியர்களாகிய நாம் பேசுவதிலேயே அதிக கவனத்தைச் செலுத்தி நமது ஆற்றலை இழந்து விடுகிறோம். அதுவே நமக்கான வாய்ப்புகளையும் தொலைத்து விட வழியமைத்து விடுகிறது. நின்று நிதானித்து கேளுங்கள் எல்லோருக்குள்ளும் புத்தன் வாசம் செய்கிறான் என்பது இந்தக் கவிதை நமக்கு கொடுக்கும் அமைதிச் சின்னம்.

"வளர்ந்து கொண்டிருப்பது செடிக்கு மகிழ்ச்சி.
நகர்ந்து கொண்டிருப்பது நதிக்கு மகிழ்ச்சி
எரிந்து கொண்டிருப்பது தீபத்திற்கு மகிழ்ச்சி
முயன்று கொண்டிருப்பது மனிதனுக்கு மகிழ்ச்சி"

என்று தான் எழுதிய கவிதையைப் போலவே கவிதையின் ஒவ்வொரு நுட்பத்திலும் முயன்று கற்றுக் கொள்ளும் இந்த கவிஞருக்கு எளிய மொழியும் அதற்குள் புகுத்திக் கொண்டிருக்கும் வலிமையான கருத்துக்களும் நல்லதொரு நடைச் சித்திரத்தை கடைவிரிக்கின்றன.

இலக்கியத்தின் தீரா பசி என்பது மனிதருக்குள் எப்போதும் அன்பையும் கருணையையும் விதைத்துச் செல்வதே. ஒரு நல்ல இலக்கியம் என்பது வாசிப்பவருக்குள் ஏதேனும் ஒரு சிறு தாக்கத்தையாவது ஏற்படுத்தி விட வேண்டும். நூலை வாசிப்பவர்களுக்கு இயற்கையின் மீதான நேசமும் சக மனிதர்களின் மீதான பாசமும் உறவுகளின் மீதான பந்தமும் தொடர்ந்து வருவதற்கு கவிதை வரிகள் வழிகாட்டக் கூடும். ஒவ்வொரு கவிஞனுக்குள்ளும் இந்த பரந்த உலகத்தின் அவலங்களை துரத்தி அடிக்கும் ஏதேனும் ஒரு கனவு இருந்து கொண்டே இருக்கும். அத்தகைய கனவுகளை எழுத்தாக எழுதி வைப்பவர்களும் உண்டு. செயல்பாடுகளுக்குள் சிறந்து விளங்குபவர்களும் உண்டு.

" நீண்ட நாட்களாக நான் மனிதனைத் தேடுகிறேன்
மனிதத்தைத் தேடுகிறேன்
மனிதருள் மனிதம் இல்லை
எல்லோரும் மனிதனைப் போல் இருப்பதால்
இன்னும் தேடுதல் நிறைவடையவில்லை"




என்ற இவரது கவிதையைப் போலவே இலக்கியத்தடத்தில் இவரது தேடல்கள் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கட்டும். அதுவே அவருக்கான வார்த்தைகளையும் எடுத்துக் கொடுத்து நல்ல நல்ல தொகுப்புகளுக்கு களம் அமைக்கும்.

கவிஞர் இளையவன் சிவா

# 'சிலம்பொலி' சு.செல்லப்பன்

கட்டுரை

## வாழ்க்கைக் குறிப்பு

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள சிவியாம்பாளையம் எனும் ஊரில் பழனியம்மாள் - சுப்பராயன் ஆகியோருக்கு மகனாக 22 டிசம்பர் 1929 அன்று பிறந்தார்

## பணிகளும் பொறுப்பும்:

கணித ஆசிரியர், மாவட்டக் கல்வி அலுவலர், இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு (1968) உதவி அலுவலர், தமிழ் வளர்ச்சி இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர். தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தரைப் பரிந்துரைக்கும் குழுவின் தலைவர் 1999



## எழுதிய நூல்கள்

- சிலம்பொலி (1975)
- சங்க இலக்கியத் தேன் (மூன்று தொகுதிகள், 1996)
- நல்ல குறுந்தொகையில் நானிலம், 1959
- மூன்றும் நான்கும் (திரிகடுகம் , நாண்மணிக்கடிகை தெளிவுரை),
- இளங்கோ அடிகள் அருளிய சிலப்பதிகாரம் (மூலமும் தெளிவுரையும்),
- மணிமேகலை (மூலமும் தெளிவுரையும்), 1998
- நாலடியார் (மூலமும் தெளிவுரையும்), 2000
- மலர் நீட்டம் (திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகள்), 2003
- சிலப்பதிகாரச் சிந்தனைகள், 2011
- கணிதச் செல்வம் (எட்டு நூல்கள்), 1964-1966
- பாரதிதாசன் ஒர் உலகக் கவிஞர், 1983

திரு அ. வில்சன், இதழாசிரியர்

- பாரதிதாசன் ஒர் உலகக் கவிஞர், 1983
- வளரும் தமிழ், 1987
- காப்பியக் கம்பரும் புரட்சிக் கவிஞரும், 1989
- நெஞ்சை அள்ளும் சீறா (நான்கு தொகுதிகள்), 2004
- இலக்கியச் சிந்தனைகள், 2004
- பெருங்கதை ஆராய்ச்சி, 2006
- இக்காலத் தமிழ்க் காப்பியங்கள், 2004
- இலக்கியம் ஒரு பூக்காடு, 2004
- பூங்காவில் புதுமணம், 2009
- இசுலாமிய இலக்கியச் சாரல், 2011
- நான் ஒரு தும்பி, 2004
- திருக்குறள் இன்பத்துப்பால் (மூலமும் உரையும்), 2015
- பெருங்குணத்துக் கண்ணகி, 2008
- செம்மொழித்தமிழ் அகப்பொருள் களஞ்சியம்:14 தொகுதிகள், 2016
- சிலம்பொலியார் பார்வையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர், 2008




## பட்டங்களும் விருதுகளும்

- சிலம்பொலி பட்டம் (1954 இல் இரா. பி. சேதுப்பிள்ளை வழங்கியது) பாவேந்தர் பாரதிதாசன் விருது
- சிலம்பொலியாரின் அணிந்துரைகள் எனும் நூல் தமிழ் வளர்ச்சித் துறையின் 2006 ஆம் ஆண்டிற்கான சிறந்த நூல்களில் திறனாய்வு எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.
- கம்பன் புகழ் விருது, 2013 வழங்கியது: கொழும்புக் கம்பன் கழகம், இலங்கை

## தொடர் சொற்பொழிவுகள்

செல்லப்பனின் முக்கியமான பங்களிப்பு பட்டிதொட்டியெங்கும் பழந்தமிழ் இலக்கியத்தைத் தன்னுடைய உரைகளின் வழி தூக்கிச் சுமந்தவர் என்பதாகும். அவர் உரையில் அறைகூவல், உரத்த ஆவேசம், மற்றவரைக்

'சிலம்பொலி' சு.செல்லப்பன்

கட்டுரை

### தொடர் சொற்பொழிவுகள்

செல்லப்பனின் முக்கியமான பங்களிப்பு பட்டிதொட்டியெங்கும் பழந்தமிழ் இலக்கியத்தைத் தன்னுடைய உரைகளின் வழி தூக்கிச் சுமந்தவர் என்பதாகும். அவர் உரையில் அறைகூவல், உரத்த ஆவேசம், மற்றவரைக் கிண்டலடித்தல், நயங்குறைந்த நகைச்சுவை ஆகியவை இடம்பெறாது. ஆனால், முதல் முறையாகக் கேட்போருக்கும் பழந்தமிழ் இலக்கியத்தின் மீது காதல் உண்டாகிவிடும்படி விளக்கங்களோடும் சுவாரஸ்யமான உதாரணங்களோடும் பேசுவார். தன் வாழ்க்கையின் நடப்புக்களையும், நாட்டுப்புற இலக்கிய வழக்குகளையும், தனிப் பாடல்களையும் சேர்த்துப் பேசுவார்.

சங்க இலக்கியம், சீவக சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், சீறாப்புராணம், தேம்பாவணி, வைணவத் தமிழ், பாவேந்தரின் பாடல்கள், காவியங்கள், நாடகங்கள், ராவண காவியம் எனத் தமிழ் இலக்கியங்களை ஆண்டுக்கணக்கில் தொடர் உரையாற்றி மங்காப் புகழ்பெற்றவர். ஒய்.எம்.சி.ஏ. அரங்கத்தில் ஐந்து இலக்கியங்களை ஆண்டுக்கணக்கில் தொடர்ப் பொழிவாற்றினார். திருச்செங்கோடு மாநகரில், ஐம்பதாண்டுகளாக விடுதலை வீரர் அண்ணல் காளியண்ணனுடன் இணைந்து, ஆயிரக்கணக்கான தமிழன்பர்களை அழைத்துவந்து, இயல், இசை, நாடக முத்தமிழ் விழாவாக, ஒரு மாநாடுபோல நடத்தி சிலப்பதிகாரப் புகழை நிலைநிறுத்தியவர் செல்லப்பன்.

### மறைவு

06 ஏப்ரல் 2019 அன்று இந்த மண்ணுலகை விட்டு மறைந்து,விண்ணுலகில் தமிழ்ப்பணி ஆற்ற சென்றுவிட்டார்

### நன்றி

https://ta.wikipedia.org/wiki/
https://www.hindutamil.in/
ஔவை ந.அருள், இயக்குநர், மொழிபெயர்ப்புத் துறை, தமிழ்நாடு அரசு.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

# நாளை நமதே

## மனதால்

## வலிமை கொள்

## உன்னை வீழ்த்த

## யாரும் இல்லை

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com